நெஷனல் பேப்பர் கம்பனி லிமிட்டெட் - 2018 /2019

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 மறுப்பு அபிப்பிராயம்

நெஷனல் பேப்பர் கம்பனி லிமிட்டெட்டின் 2019 மார்ச் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகளை கொண்டமைந்த 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. அபிப்பிராயத்தை மறுப்பதற்கான அடிப்படைப் பந்தியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதுள்ளது.

1.2 அபிப்பிராயத்தினை மறுப்பதற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்கள் காரணமாக, கணக்காய்வு அபிப்பிராயத்தினை வெளியிடுவதற்கான அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்வதற்காக பொருத்தமான, போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை என்னால் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. அதற்கமைய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் நான் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை.

1.3 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனி தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமைகள்

	குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் பந்தி 32 இன் பிரகாரம், ஒரு கணக்கீட்டு நியமத்தினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தால் தவிர, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஒன்றுக்கொன்று ஈடுசெய்தல் மேற்கொள்ளப்படலாகாது. இருப்பினும், கம்பனி மீளாய்வாண்டில் ரூபா 43,153,550 பெறுமதியான சொத்துக்கள் ரூபா 10,151,947 பெறுமதியான பொறுப்புகளுடன் ஈடு செய்யப்பட்டிருந்தது.	எதிர்காலக் கணக்கீட்டு நடவடிக்கைகளை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கணக்கு வைத்தல் இடம்பெற வேண்டும்.
(ஆ)	இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 12 இன் பிரகாரம், 2019 மார்ச் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான வரிக் கணக்கீடு மற்றும் பிற்போடப்பட்ட வரிக் கணக்கீடு என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலக் கணக்கீட்டு நடவடிக்கைகளை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.	கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கணக்கு வைத்தல் இடம்பெற வேண்டும்.

(இ)	இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் பிரகாரம், காணிக்கான கிரயத்தினை தனியாகவும், கட்டிடங்களுக்கான கிரயத்தினை தனியாகவும் நிதிக்கூற்றுக்களில் இனங்காண வேண்டும். இருப்பினும், கம்பனியின் சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கட்டிடங்களின் கிரயங்களை தனித்தனியாக இனங்காணாமல் ரூபா 132,274,693 என ஒற்றைப் பெறுமதியாகக் காட்டப்பட்டிருந்தது.	எதிர்காலக் கணக்கீட்டு நடவடிக்கைகளை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.	கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கணக்கு வைத்தல் இடம்பெற வேண்டும்.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	கம்பனியின் மோட்டார் வாகனங்களுக்கான பெறுமானத்தேய்வு ஏற்பாடு ரூபா 3,851,831 தொகை மற்றும் கணினிகளுக்கான பெறுமானத்தேய்வு ஒதுக்கம் ரூபா 220,701 தொகையும், உபயோகப் பொருட்களுக்கான பெறுமானத்தேய்வு ஒதுக்கம் ரூபா 220,802 தொகையும் அதன் கிரய மதிப்பை விட அதிகமாகக் கணக்கிடப்பட்டதன் காரணமாக, வருடாந்த இலாபம் ரூபா 4,293,334 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.	வருங்கால கணக்கீட்டு நடவடிக்கைகளை கணக்கீட்டு நியமங்களுக்கு அமையச் செயல்பட நடவடிக்கை எடுப்பேன்.	கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கணக்கு வைத்தல் இடம்பெற வேண்டும்.

1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

விடயம்	தொகை ரூபா	சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
செலவுக் கணக்குகள்	11,488,856	10 கணக்குகளுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்தத் தேவையான சான்றுகள்	கணக்காய்வுக்காக தகவல்களைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கின்றேன்.	கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்துவதற்குரிய உரிய சான்றுகளைப் பேணுதல் வேண்டும்.
சொத்துக் கணக்குகள்	1,271,410,707	06 கணக்கு மீதிகளுடன் தொடர்புடைய கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தத் தேவையான சான்றுகள்	கணக்காய்வுக்காக தகவல்களைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கின்றேன்.	கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய உரிய சான்றுகளைப் பேணுதல் வேண்டும்.

பொறுப்புக் கணக்குகள்	1,875,391,043	21 கணக்கு மீதிகளுடன் தொடர்புடைய கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தத் தேவையான சான்றுகள்	கணக்காய்வுக்காக தகவல்களைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கின்றேன்.	கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற் குரிய உரிய சான்றுகளைப் பேணுதல் வேண்டும்.
காசுப் புத்தகத்தின் பிரகாரம் பெறுவனவுகள்	22,211,233	பெறுகைகளுக்குரிய உரிய பற்றுச்சீட்டுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான ஆவணங்கள்	குறித்த காலப்பகுதியில் கம்பனி மூடப்பட்டிருந்ததுடன், 9/2020 அமைச்சரவை அங்கீகாரத்தின்படி நெஷனல் பேப்பர் கம்பனி லிமிடட் பல்வகைப்படுத்தல் செயற்திட்டமாக மறுசீரமைக்கப்படல் மற்றும் எதிர்காலக் கணக்கீட்டு நடவடிக்கைகள் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்படும் என்பது.	நிதிக்கூற்றுக்களில் உள்ள வரிசை பொருட்களின் மீதிகளை உறுதிப்படுத்துவதற் குரிய உரிய சான்றுகளைக் கணக்காய்வுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.
காசுப் புத்தகத்தின் பிரகாரம் கொடுப்பனவுகள்	20,030,784	கொடுப்பனவுகளுக்கு ரிய உரிய உறுதிச்சீட்டுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான ஆவணங்கள்	குறித்த காலப்பகுதியில் கம்பனி மூடப்பட்டிருந்ததுடன், 9/2020 அமைச்சரவை அங்கீகாரத்தின்படி நெஷனல் பேப்பர் கம்பனி லிமிடட் பல்வகைப்படுத்தல் செயற்திட்டமாக மறுசீரமைக்கப்படல் மற்றும் எதிர்காலக் கணக்கீட்டு நடவடிக்கைகள் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்படும் என்பது.	நிதிக்கூற்றுக்களில் உள்ள வரிசை பொருட்களின் மீதிகளை உறுதிப்படுத்துவதற் குரிய உரிய சான்றுகளைக் கணக்காய்வுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டிய பணம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	ஆறு வருடங்களுக்கும் மேலாக முன்கொண்டுவரப்படும் ரூபா 42,450,103 பெறுமதியான கடன் பட்டோர் மீதிகள் மற்றும் காலப் பகுப்பாய்வுகள் இல்லாத ரூபா 67,785,219 பெறுமதியான கடன் பட்டோர் மீதிகளை அறவிட வேண்டிய தரப்பினரை இனங்கண்டு அறவிடுவதற்கான நடவடிக்கைகளை கம்பனி மேற்கொள்ளவில்லை.	குறித்த காலப்பகுதியில் கம்பனி மூடப்பட்டிருந்ததுடன், தற்போதைய நிலையில், அந்தக் கொடுக்கல் வாங்கல்களை அறவிடுவதற்காக முறைசார்ந்த நடவடிக்கைகளை எடுப்பதற்கு பணிப்பாளர் சபையினால் வழிகாட்டப்படுகின்றது.	கடன் பட்டோர் மீதிகளை விரைவாகத் தீர்க்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 1,195,325 தொகையான இலாபம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 6,674,484 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 5,479,159 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு அப்புறப்படுத்தப்படும் கடதாசி விற்பனை வருமானம் ரூபா 8,100,031 இனால் குறைவடைந்தமை பிரதான காரணங்களாகும்.

2.2 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் போதும், கடந்த வருடத்தைப் போன்றே, மொத்த நட்டம் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், அது சதவீதமாக 1 சதவீதமாக இருந்தது. கம்பனியின் திரவத்தன்மை விகிதங்களைக் கருத்தில் கொள்ளும்போது, நடைமுறை விகிதம் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமமான 2:1 ஆக இருக்க வேண்டிய போதிலும், அது 0.44:1 ஆக இருந்தது. அதேபோன்று, விரைவு விகிதம் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமமான 1:1 ஆக இருக்க வேண்டிய போதிலும், அது 0.37:1 ஆக இருந்தது. இதற்கமைய, நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் ஆகியவை உத்தம நிலையில் இருக்க வேண்டிய அளவை விடக் குறைந்த மட்டத்தில் காணப்படுவதற்கு, நீண்டகாலமாகத் தீர்க்கப்படாத நடைமுறைப் பொறுப்புகள் ரூபா 1,451,731,125 ஆகவும், நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 275,435,666 ஆகவும் காணப்பட்டமையே காரணம் என அவதானிக்கப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 148 ஆம் பிரிவின் பிரகாரம், கம்பனியின் கொடுக்கல் வாங்கல்களைச் சரியாகப் பதிவுசெய்து விளக்கும் கணக்கீட்டுப் பதிவுகள் மற்றும் மூல	இந்தக் காலப்பகுதியில் கம்பனி மூடப்பட்டிருந்ததுடன், 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் கம்பனி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து கணக்கீட்டுப்	2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 148 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்படல்

	ஆவணங்கள் பேணப்பட வேண்டும். இருப்பினும், குறித்த கணக்கீட்டுக் காலப்பகுதியுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் தொடர்பான போதிய கணக்குப் புத்தகங்கள் மற்றும் கணக்கீட்டுச் சான்றுகளைப் பாதுகாப்பாகப் பேணுவதற்கு கம்பனியின் உரிய அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதிவுகளையும் மூல ஆவணங்களையும் பாதுகாப்பாகப் பேணுவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.	வேண்டும்.
(ஆ)	கம்பனியின் இலங்கை வங்கியில் உள்ள 164807 இலக்க நடைமுறைக் கணக்கின் மீதியுடன் காசுப் புத்தகத்தின் மீதியைச் இணக்கம் செய்வதற்காக வங்கிக் கணக்கு இணக்க கூற்று தயாரிக்கப்படவில்லை.	எதிர்காலக் கணக்கீட்டு நடவடிக்கைகளை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.	மாதாந்த வங்கிக் கணக்கு இணக்க கூற்றினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	2015 பெப்ரவரி 09 ஆந் திகதி நிலவரப்படி, இலங்கை மின்சார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்சாரக் கட்டணமான ரூபா 483,997,075 ொதகையை செலுத்தாத காரணத்தினால், அன்றிலிருந்து வாழைச்சேனைத் தொழிற்சாலைக்கு மின்சாரம் வழங்குவது தற்காலிகமாகத் துண்டிக்கப்பட்டிருந்தது. மின்சார விநியோகம் இல்லாத காரணத்தினால், 2020 ஜூன் மாதம் வரை வாழைச்சேனைத் தொழிற்சாலையில் எந்தவொரு உற்பத்திச் செயல்பாடும் இடம்பெறவில்லை. எவ்வாறாயினும், 2022 செப்டெம்பர் 08 ஆந் திகதிய இலக்கம் EP/EE(COM)/CS/BulkSupply கொண்ட இலங்கை மின்சார சபையின் பிரதான முகாமையாளரின் கடிதத்திற்கு அமையவும், 2020 மார்ச் 26 ஆந் திகதிய இலக்கம் அமப/20/0561/224/015 கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலமும், ரூபா 361,992,685 பெறுமதியான அபராத வட்டி நீக்கப்பட்டதன் பின்னர், மீதமுள்ள ரூபா 122,004,390 நிலுவை மின்சாரக் கட்டணத்தை, தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து	பதில் வழங்கப்படவில்லை.	நிலுவை மின்சாரக் கட்டணங்களைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	இரண்டு வருடங்கள் கழிந்த பின்னர் வரும் ஆறு மாதக் காலப்பகுதிக்குள் தவணைக் கொடுப்பனவுகளாகச் செலுத்தி முடிக்கும் நிபந்தனைக்கு உட்பட்டு அனுமதி பெறப்பட்டு, 2020 ஜுலை மாதத்தில் தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. இருப்பினும், 2025 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில், காகித கம்பனியால் நிலுவை மின்சாரக் கட்டணமான ரூபா 111,004,390 பெறுமதியான தொகை செலுத்தப்பட வேண்டியதாக இருந்தது.		
(ஈ)	2014 ஆம் ஆண்டில், பெர்த் இன்ஜினியரிங் அண்ட் மெயின்டனன்ஸ் (தனியார்) கம்பனி குத்தகை ஒப்பந்தத்தை மீறி எம்பிலிபிட்டிய ஆலையை விட்டுச் சென்றதன் பின்னர், 2022 மார்ச் 09 ஆந் திகதியிட்ட குத்தகை ஒப்பந்தத்தின் கீழ், இரண்டாவது குத்தகைதாரரான கே.எஸ்.பி.ஏ எம்பிலிபிட்டிய காகித ஆலைகள் (தனியார்) கம்பனி (KSPA Ambilipitiya Paper Mills private limited) இற்கு, ரூபா 260 மில்லியன் மீள்நிறுவுதல் அடிப்படையில் 30 வருட காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தின்படி, 18 மாதங்களுக்குள் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். அந்தக் காலப்பகுதியில் ரூபா 13,000,000 இற்குச் சமனான வருடாந்த குத்தகை வாடகைத் தவணையைக் குத்தகைதாரர் கம்பனிக்குச் செலுத்த வேண்டும். உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், குத்தகை ஒப்பந்தத்தின்படி விற்பனை வருமானத்தில் 3 சதவீதத்திற்குச் சமமான பெறுமதி வருடாந்த குத்தகை வாடகைத் தவணையாகச் செலுத்தப்பட வேண்டும். அதற்கமைய, கே.எஸ்.பி.ஏ எம்பிலிபிட்டிய காகித கம்பனி 2024 ஏப்ரல் 18 ஆந் திகதி உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்த போதிலும், ஒப்பந்தத்தின் பிரகாரம் குத்தகை	பதில் வழங்கப்படவில்லை.	ஒப்பந்தத்தின்படி உரிய குத்தகை வாடகையை அறவிடுவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	வாடகையை அறவிடுவதற்கு கம்பனி நடவடிக்கை எடுக்கவில்லை.		

3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக காகிதம் தயாரிக்கும் இயந்திரம் (Paper Machine) மற்றும் பலகை தயாரிக்கும் இயந்திரம் (Board Machine) பிரதான இயந்திரங்கள் 02 இருந்தன. 2020 ஆம் ஆண்டில் வாழைச்சேனை காகித தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுச் செயற்பட்டு வந்தபோது, பலகை தயாரிக்கும் இயந்திரம் செயலிழக்கும் மற்றும் இயந்திரக் கோளாறுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில், அதன் சரியான இயக்கத்திற்காக காகிதம் தயாரிக்கும் இயந்திரத்திலிருந்து பகுதிகளைக் கழற்றி பலகை தயாரிக்கும் இயந்திரத்தில் பொருத்துவதே கம்பனியின் முகாமைத்துவம் பின்பற்றிய முறையாகும். கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதன்படி, காகிதம் தயாரிக்கும் இயந்திரத்திலிருந்து 08 பிரதான பொருட்கள் பலகை தயாரிக்கும் இயந்திரத்தில் பொருத்தப்பட்டுள்ளன. அவற்றின் பெறுமதி ரூபா 34,433,059 ஆகும். அதற்கமைய, கணக்காய்வுத் திகதியான 2025 பெப்ரவரி 20 ஆந் திகதி வரையிலும் காகிதம் தயாரிக்கும் இயந்திரம் எந்தப் பிரயோஜனமும் எடுக்க முடியாத மட்டத்தில் செயலிழந்து காணப்பட்டதுடன், தற்போது காகிதம் தயாரிப்பதற்காக பலகை தயாரிக்கும் இயந்திரம் மாத்திரமே பயன்படுத்தப்படுவதாகவும் அவதானிக்கப்பட்டது.	பதில் வழங்கப்படவில்லை.	குறைவாகப் பயன்படுத்தப்படும் காகிதம் தயாரிக்கும் இயந்திரத்திற்குத் தேவையான திருத்த வேலைகளை மேற்கொண்டு, அதனை உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துதல் வேண்டும்.

(ஆ)	2011 திசெம்பர் 19 ஆந் திகதியிட்ட இலக்கம் 1037 கொண்ட குத்தகை ஒப்பந்தத்தின்படி, எம்பிலிபிட்டிய தொழிற்சாலையை மீள் நிறுவுதல் மற்றும் மீள் அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 600 மில்லியன் மீள்நிறுவுதல் அடிப்படையில் 30 வருட காலப்பகுதிக்கு அரச வள முகாமைத்துவ கம்பனி, தேசிய காகித கம்பனி மற்றும் பெர்த் இன்ஜினியரிங் அண்ட் மெயின்டனன்ஸ் (தனியார்) கம்பனி ஆகியவற்றுக்கு இடையிலான ஒப்பந்தத்தின்படி இணக்கம் காணப்பட்ட ரூபா 600 மில்லியன் மீள்நிறுவுதல் தொகையில் ரூபா 200 மில்லியன் தொகையைக் குத்தகைதாரர் செலுத்தவில்லை. மேலும், குறித்த கம்பனியால் ஒரு குறுகிய காலத்திற்கு உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், பின்னர் எம்பிலிபிட்டிய தொழிற்சாலைக்குச் சொந்தமான காகிதம் தயாரிக்கும் இயந்திரத்தை ரூபா 418,483,037 பெறுமதிக்குச் செலான் வங்கிக்கு அடகு வைத்துவிட்டு, 2012 ஆம் ஆண்டில் தொழிற்சாலையை விட்டு வெளியேற நடவடிக்கை எடுத்திருந்தது. அதற்கமைய, உரிய குத்தகைத் தவணைகளைக் கட்ட தவறியமையின் அடிப்படையில், அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில், உரிய குத்தகை ஒப்பந்தம் 2014 செப்டெம்பர் 25 ஆந் திகதி இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும், 2011 திசெம்பர் 19 ஆந் திகதியிலிருந்து ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்ட காலப்பகுதியான 2014 செப்டெம்பர் 25 வரையான மூன்று வருட காலப்பகுதிக்கு பெறப்பட வேண்டிய ரூபா 42 மில்லியன் குத்தகை வாடகையை அறிவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள்	பதில் வழங்கப்படவில்லை.	ஒப்பந்தத்தின்படி உரிய குத்தகை வாடகையை அறிவிடுவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதேபோன்று, உற்பத்தி இயந்திரங்களைச் செலான் வங்கிக்கு அடகு வைத்தமைக்காக, தேசிய காகித கம்பனியைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஒப்பந்தத்தில் ஈடுபட்ட தரப்பினரிடம் இருந்து கம்பனிக்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்காக அரச வள முகாமைத்துவ கம்பனி எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும், ஒப்பந்தத்தில் ஈடுபட்ட பெர்த் இன்ஜினியரிங் அண்ட் மெயின்டனன்ஸ் (தனியார்) கம்பனி உற்பத்தி நடவடிக்கைகளை நிறுத்தியமையால் ஏற்பட்ட ஒப்பந்த மீறல் குறித்து, குத்தகைக்கு வழங்கிய தரப்பான அரச வள முகாமைத்துவ கம்பனியால் எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை.		

3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
2020 ஜூலை மாதத்திலிருந்து, கம்பனியின் தலைமை அலுவலகத்தில் நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 08 ஊழியர்களும் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 23 ஊழியர்களும் அடங்கலாக 31 ஊழியர்களும், வாழைச்சேனை தொழிற்சாலையில் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 13 ஊழியர்களும், நாட் சம்பள அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 06 ஊழியர்களும், மற்றும் மணித்தியால விகிதங்களின்படி ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 132 ஊழியர்களும் அடங்கலாக 151 ஊழியர்களுமாக கம்பனியின் மொத்த ஊழியர் தொகை 182 ஆக இருந்தது. எவ்வாறாயினும், மீள ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து	பதில் வழங்கப்படவில்லை.	நிர்ணயிக்கப்பட்ட பதவியணியொன்றுக் காக முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திடமிரு ந்து அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

தொடர்ச்சியாக நான்கு வருடங்கள் இந்த பதவியணியினருடன் வணிக நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்பட்ட போதிலும், நிர்ணயிக்கப்பட்ட பதவியணிக்காக (Cadre) முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திடமிருந்து அனுமதி வழங்கப்படவில்லை.